செ.வெ.எண் : 29 - நாள் : 17.05.2021

**கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆக்சிஜன் இருக்கை வசதியுடன் கூடிய இரு பேருந்துகள் அரசு மருத்துவக்கல்லூரியில் KGISL நிறுவனம், கோயம்புத்தூர் தொழில்முனைவோர் சங்கம் (Entrepreneur Assosiation) மற்றும் சேவா கேஸ் அமைப்பு ஆகியவை இணைந்து வழங்கினார்கள்.**

*********************************************************

கொரோனா முதல் அலையைவிட இரண்டாம் அலை மிக வேகமாக பரவிவருகிறது. இதனை எதிர்கொள்ளவும், தொற்றின் வீரியத்தை உணர்ந்து மருத்துவமனைகள், மருந்துகள், படுக்கை வசதிகள், ஆக்ஸிஜன் வசதிகள், தடுப்பூசிகள் உள்ளிட்ட பல்வேறு உள்கட்டமைப்புகளை அதிகப்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும், மாவட்ட நிர்வாகத்தின் கொரோனா தொற்று பணிகளில் தமிழ்நாடு முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு நிவாரண நிதியாகவோ, அரசு மருத்துவமனைகளுக்கு தேவைப்படும் பொருட்களாகவே வழங்கி தங்களை இணைத்துக் கொள்ள மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் இன்று (17.05.2021) கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆக்சிஜன் இருக்கை வசதியுடன் கூடிய இரு பேருந்துகளை அரசு மருத்துவக்கல்லூரியில் KGISL நிறுவனம், கோயம்புத்தூர் தொழில்முனைவோர் சங்கம் (Entrepreneur Assosiation) மற்றும் சேவா கேஸ் அமைப்பு ஆகியவை இணைந்து வழங்கியுள்ளனர்.

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற ஆக்சிஜன் தேவையுடன் வரும் நோயாளிகளுக்கு உடனடியாக ஆக்சிஜன் வழங்கும் வகையில் KGISL நிறுவனம், கோயம்புத்தூர் தொழில்முனைவோர் சங்கம் (Entrepreneur Assosiation) மற்றும் சேவா கேஸ் அமைப்பு ஆகியவை இணைந்து அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை தலா 12 ஆக்சிஜன் இருக்கை வசதிகளுடன் கூடிய இரு பேருந்துகளை வடிவமைத்து வழங்கினர். இப்பேருந்தில 7 கன மீட்டர் கொள்ளளவு கொண்ட 6 பெரிய வடிவிலான சிலிண்டர்கள் பொருத்தப்பட்டுள்ளது. 12 நோயாளிகளுக்கு ஒருநாள் முழுவதும் தேவைப்படும் ஆக்சிஜனை இப்பேருந்தின் மூலம் வழங்கலாம். இப்பேருந்துகளில் பயன்படுத்தப்படும் ஆக்சிஜன் சிலிண்டர்களை குறிப்பிட்ட இடைவெளியில் நிரப்பித்தரும் பணியினையும் சேவா கேஸ் அமைப்பே ஏற்றுள்ளது. இன்றுமுதல் பயன்பாட்டிற்கு வரும் இந்த ஆக்சிஜன் பேருந்தினை அரசு மருத்துவக்கல்லூரிக்கு ஆக்சிஜன் தேவையோடு வரும் நோயாளிகள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இந்நிகழ்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இராமதுரைமுருகன், அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.நிர்மலா, KGISL நிறுவன துணைத் தலைவர் திரு.தேவராஜ் பழனிசாமி அவர்கள், கோயம்புத்தூர் தொழில்முனைவோர் சங்க திரு.வாஞ்சினாதன், கேஸ் சேவா அமைப்பைச் சார்ந்த சேவா.அழகப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**